MAY 2022 **P/ID 35325/PTL3R**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. ஒப்பிலக்கியம் - சொற்பொருள் விளக்கம் தருக.
2. நான்கு வகையான இலக்கியப் பார்வைகளைப் பகர்க.
3. கூர்தலறக் கோட்பாடு என்றால் என்ன?
4. ஏற்றல் கொள்கை என்பது யாது?
5. க. கைலாசபதியின் ஒப்பிலக்கிய நூல்கள் யாவை?
6. பாரதியோடு ஒப்புநோக்கிக் கூறத்தக்க உலகக் கவிஞர்கள் யாவர்?
7. ஒருமொழி இலக்கிய ஒப்பீடு குறித்து எழுதுக.
8. காவிய காலம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
9. திராவிட மொழிகள் யாவை?
10. உலகம் என்னும் பொதுச் சொல்லைக் கொண்டு தொடங்கும் தமிழ் நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
11. தழுவல் என்றால் என்ன?
12. முதன் முதலில் கம்பனையும் வால்ட் விட்மனையும் ஒப்பிட்டு ஆராய்ந்தவர் யார்?

பகுதி ஆ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. ஒப்பிலக்கிய ஆய்வின் பயன்களை எழுதுக.

14. மேத்யூ அர்னால்டின் ஒப்பிலக்கியப் பணியினை எடுத்தியம்புக.

15. தேசிய இலக்கியம் என்றால் என்ன? விளக்கம் தருக.

16. திருப்பாவை - திருவெம்பாவை ஒப்பிட்டு ஆய்க.

17. வீரநிலைபாட்டின் பண்புகளை எடுத்துரைக்க.

18. தமிழண்ணலின் ஒப்பிலக்கியப் பணியினை விளக்குக.

19. சங்ககால அக, புறப்பாடல்களின் ஒப்பீட்டைப் பற்றி நீவிர் அறிந்தனவற்றைத் தொகுத்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. 'ஒப்பிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

21. இலக்கிய வகைமையின் இன்றியமையாமையை விவரிக்க.

22. கம்பன் - வால்மீகி ஒப்பிட்டு ஆய்க.

23. பதிணென் கீழ்க்கணக்கு நூல்களில் ஏதேனும் இரு நீதி நூல்களை ஒப்பிட்டு ஆய்க.

24. தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வு போதுமானதாக உள்ளதா? சான்றுடன் நிறுவுக.

———————